# <u>அரசு தொழில்நுட்பக் கல்லூரி – திருநெல்வேலி – 627007</u>

பெற்றோர் அல்லது பாதுகாவலர் மற்றும் மாணவர்/மாணவியர் இணைந்து அளிக்கும் உறுதிமொழி. நான் இதன் மூலம் அளிக்கும் உறுதிமொழி என்னவென்றால்:

1. எனது மகன்/மகள் பாதுகாப்பில் உள்ளவரின் விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் அவர் அதனுடன் இணைந்து சமர்ப்பித்துள்ள சான்றிதழ்கள் அனைத்தும் உண்மை. இருப்பினும், மேற்கூறிய செய்திகள் உண்மையில்லை என்று கண்டறியப்பட்டால், என் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கவும், எனது மகன்/மகள் பாதுகாப்பில் உள்ளவருக்கு தங்கள் நிறுவனத்தில் கொடுக்கப்பட்ட இடத்தை இழக்கவும் ஒப்புக்கொள்கிறேன்.

2. எனது மகன்/மகள் பாதுகாப்பில் உள்ளவர் தேர்வுத் தேர்வுகளில் ஒவ்வொரு எழுத்துமுறைத் தேர்விலும் 40/100 மதிப்பெண்களும், செய்முறைத் தேர்வில் 50/100 மதிப்பெண்களும் எடுத்தால் மட்டுமே, அவர் அந்தப் பாடத்தில் தேர்வுத் தேர்வால் தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கப்படுவார் என்பதையும் நன்கு அறிவோம்.

3. கல்லூரி பாடத்திட்டத்தில் உள்ள கோட்பாட்டு (Theory) மற்றும் செய்முறை வகுப்புகளில், எனது மகன்/மகள் பாதுகாப்பில் உள்ளவர் நடப்பு பருவத்தில் குறைந்தபட்சம் 80% வருகை இல்லையென்றால், அவர் தேர்வுத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட மாட்டார் என்பதை அறிந்து ஒப்புக்கொள்கிறேன்.

4. எனது மகன்/மகள் பாதுகாப்பில் உள்ளவர் கல்லூரியில் சேர்க்கப்படும் பொழுது கல்லூரியில் நடைமுறையில் உள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும் என்பதையும், அவ்வாறு பின்பற்றாமல் ஒழுங்கீனமாக நடந்து கொண்டாலோ, கல்லூரியில் நடைபெறும் வகுப்புகளுக்கு வராமல் வகுப்பு புறக்கணிப்பு போன்ற ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபட்டால், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உணர்ந்து அதற்கு ஒப்புக்கொள்கிறேன்.

5. எனது மகன்/மகள் பாதுகாப்பில் உள்ளவர் இக்கல்லூரியில் சேர்ந்து படித்து வரும் காலத்தில் நிர்வாகத்திற்கு சொந்தமான எந்தவிதமான பொருள்களை சேதப்படுத்தினால், எனது மகன்/மகள் பாதுகாப்பில் உள்ளவரிடம் நிர்வாகம் கோரும் தொகையை செலுத்த வேண்டும் என்பதும், அவர் மீது மேற்கொண்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் உணர்ந்து ஒப்புக்கொள்கிறேன்.

6. கல்லூரி வளாகத்திற்குள் செல்போன் பேசுவது, பயன்படுத்துவது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. இதை மீறினால் என் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிவேன்.

7. ரேகிங் (Ragging) செய்வது சட்டப்படி குற்றமாகும் என்பதை நாங்கள் தெரிந்து கொண்டோம். எனது மகன்/மகள் பாதுகாப்பில் உள்ளவர் இக்கல்லூரியில் சேர்ந்து பயின்று வரும் காலத்தில் எந்த விதமான ரேகிங் செய்வதில் ஈடுபட்டால், அதற்கு நிர்வாகம் எடுக்கக்கூடிய ஒழுங்கு நடவடிக்கைக்கு கட்டுப்பட்டு, அதற்கு ஒப்புக்கொள்கிறேன்.

(மாணவரின் கையொப்பம்)

(மாணவரின் ரோல் எண் மற்றும் துறை குறிப்பிடவும்)

(பெற்றோர்/பாதுகாவலர் பெயர், முகவரி மற்றும் கைபேசி எண்கள் கீழே குறிப்பிடவும்)